DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.107/2025

**prosecution witness: LW–1 as PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மரியரேகா | தொழில் | : | தனியார் வேலை |
| த/பெ. | : | தேவதாஸ் | வயது | : | 39 |
| ஊர் | : | இராமேஸ்வரம் | சமயம் | : | கிறிஸ்துவர் |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**10.03.2026**

(1ம் எதிரி இந்நீதிமன்ற குற்றப்பல்வகை மனு எண் 830/25 என்ற மனுவில் தேடப்படும் நபராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். தாய் வழக்காக சிசி 40/2015ல் 3, மற்றும் 4ம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். சிசி 114/2016ல் 2ம் எதிரி விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனவே பிரிவு 299 கு.வி.மு.சா.வின்கீழ் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது தங்கச்சிமடத்தில் குடியிருந்து ஓட்டலில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் ஜனவரி மாதம் எனது குடும்ப நண்பரான நெகேமியா என்பவர் மூலம் ஜஸ்டின் பென்கராஜ் அறிமுகமானார். அவரை எங்களது குடும்பத்தார் சம்மதத்துடன் 17.01.2014ம் வருடம் மெய்யம்புளி, தேவசபையில் வைத்து திருமணம் செய்து கொண்டேன். எனக்கும் எனது கணவருக்கும் 01.11.2014ம் தேதி ஆண் குழந்தை பிறந்தது. எனக்கு திருமணம் ஆகி 7வது மாதத்தில் எனது கணவர் ஜஸ்டின் பென்கராஜ் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்ய முயற்சி செய்ததை நான் அவரது செல்போன் மூலம் தெரிந்து கொண்டேன்.

2. அதன் பின் நான் எனது கணவர் மற்றும் அவரது நண்பர்களிடம் தொடர்ச்சியாக விசாரித்தபோது எனது கணவருக்கு எனக்கு முன்பாகவே திருமணம் நடைபெற்று 2 குழந்தைகள் அவருக்கு இருப்பது தெரியவந்தது. மேலும் கேரளாவில் உள்ள சித்தாரில் காவல் நிலையத்தில் எனது கணவர் மீது கற்பழிப்பு வழக்கு இருப்பது தெரியவந்தது. எனது கணவரிடம் என்னை ஏமாற்றிவிட்டீர்களே குழந்தையும் வயிற்றில் உள்ளது என்று கேட்டபோது என்னை அடிக்க ஆரம்பித்து இதைப்பற்றி பேசினால் உன்னையும்

உனது குடும்பத்தாரையும் கொன்று விடுவதாக மிரட்டினார். நான் திருமணத்தின்போது ரூ.2 இலட்சம் மற்றும் 1/4 பவுன் தங்க மோதிரம் ஆகியவற்றை கொடுத்தேன். இது சம்பந்தமாக இராமேஸ்வரம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். **அந்த புகார் மனு நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.03.10 10:12:54 +0530